அரச நிதிச்சுற்றறிக்கை இலக்கம் 402 இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

# செயலாற்றுகை அறிக்கை – 2013

# முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்

**உள்ளடக்கம்** **பக்க இலக்கம்**


| | | |
|---|---|---|
| 01. | திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள்,கடமைகளும் பொறுப்புக்களும் | 02 |
| 1.1 | திணைக்களத்தின் அமைப்பு ரீதியான கட்டமைப்பு | 04 |
| 02. | நிதி நிருவாகம் | 05 |
| 03. | பௌதீக செயலாற்றுகை | 06 |
| 3.1 | அரச துறையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் செயற்திறனைஅதிகரித்தல் | 06 |
| 3.1.1 | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல் | 06 |
| 3.2 | உள்ளகக் கணக்காய்வுகளுக்கான வழிகாட்டல்களை வழங்குதல் | 06 |
| 3.3 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக்களுக்கான திறைசேரியின்பிரதிநிதித்துவத்தின் மூலம் அரச துறையின் உள்ளகக் கணக்காய்வினை பலப்படுத்தல் | 07 |
| 3.4 | நிதி, திட்டமிடல் அமைச்சின் மற்றும் திறைசேரித் திணைக்களங்களின் முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகள் | 08 |
| 3.5 | நிதி, திட்டமிடல் அமைச்சின் பல்வேறு திணைக்களங்களின் கீழ் தொழிற்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் | 09 |
| 3.6 | விசேட புலனாய்வுகள் மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள் | 09 |
| 04 | மனிதவள அபிவிருத்தி மற்றும் பொது நிருவாகம் | 12 |
| 4.1 | பணியாளர்கள் | 12 |
| 4.2 | பணியாளர்களின் பயிற்சிகள் | 13 |
| 4.2.1 | 2013 ஆம் ஆண்டில் உள்நாட்டு பயிற்சி | 14 |
| 4.2.2 | வெளிநாட்டு பயிற்சி | 15 |
| 4.2.3 | செயலாற்றுகை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 16 |

## 01. திணைக்களத்தின், நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் பணிகள்

**நோக்கு**

அதி உயர் செயலாற்றுகையையும் பொறுப்பையும் கொண்ட அரச சேவையொன்றின் பொருட்டு பெறுமதியைச் சேர்க்கின்ற மிகச் சிறந்த முகாமைத்துவ கணக்காய்வுப் பங்குதாரர் நிலையை அடைதல்

**செயற்பணி**

முகாமைத்துவக் கணக்காய்வினூடாக அரச சேவையின் பொறுப்புக்களை விருத்தி செய்வதற்கும்பெறுமதியைச் சேர்ப்பதற்கும் சுயாதீனமாக நோக்கத்தை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்குதல்.

**குறிக்கோள்**

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்.
2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மூலம் உள்ளகக் கணக்காய்விற்கு வலுவூட்டல்.
3. முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை விருத்தி செய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல்.
4. நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரித் திணைக்களங்களின் முகாமைத்துவக் கணக்காய்வுகள் சிறந்த மூலம் முகாமைத்துவத்திற்கு ஒத்துழைத்தல்.
5. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முகாமைத்துவ கணக்காய்வு செயற்பாடுகளுக்கு வலுவூட்டல்.
6. விசேட விசாரணைப் பணிகள் மூலம் அரச துறையில் ஏற்படுகின்ற மற்றும் ஏற்படக் கூடிய மோசடிகளை கண்டுபிடித்தல் மற்றும் அவ்வாறான நிலைகள், சம்பவங்களைத் தடுப்பதற்கான சிபாரிசுகள் மற்றும் நிவாரணத் திட்டங்களை அறிமுகம் செய்தல்.

**கடமைகளும் பொறுப்புக்களும்**

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வின் தரத்தையும் செயற்திறனையும் மேம்படுத்துவதற்கான அடிப்படை நிறுவனமாகத் தொழிற்படுதல்.

2. நிதி, திட்டமிடல் அமைச்சு, திறைசேரித் திணைக்களங்கள் மற்றும் அதன் கீழுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளல்.

3. உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல்
4. உள்ளகக் கணக்காய்வு அலகுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.


5. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வாளர்களின் உள்ளகக் கணக்காய்வுத் திறன்களை விருத்தி செய்தல்

6. நிதி, திட்டமிடல் அமைச்சில் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துதல், ஏனைய அமைச்சுக்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் வழிகாட்டுதல்.

7. அரச துறைகள் பின்பற்றுகின்ற அபாயக் கணிப்பீட்டு முறைமையின் பண்புசார்ந்த தன்மையைக் கணிப்பிடுதல்.

8. விசேட புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 1.1 திணைக்களத்தின் அமைப்புரீதியான கட்டமைப்பு




அலுவலக ஊழியர் 4, சாரதி 7

## 2. நிதி நிருவாகம்

2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டின் மூலம் செலவு விடயம் 324 நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 01 கருத்திட்ட இலக்கம் 01 இன் கீழ் இந்தத் திணைக்களத்திற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அந்த ஏற்பாடுகள் செலவிடப்பட்ட விதம் கீழே காட்டப்படுகின்றன.

| செலவு விபரம் | வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கம் (ரூபா) | மீள் நிரப்பல் ஏற்பாடுகள் (ரூபா) | நி.ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | எஞ்சிய ஏற்பாடுகள் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம் (அ)** | 25,710,000 | - | 654,030 | 22,075,529 | 3,634,471 |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 17,300,000 | - | | 14,717,682 | 2,582,318 |
| ஏனைய செலவுகள் | 8,410,000 | - | 654,030 | 7,357,847 | 1,052,153 |
| **மூலதனச் செலவுகள் (ஆ)** | 1,600,000 | - | - | 1,326,091 | 273,909 |
| 2001 கட்டடங்களும் நிர்மாணமும் | - | - | - | - | - |
| 2002 இயந்திரம் மற்றும் இயந்திர சாதனங்கள் | 200,000 | - | | 189,280 | 10,720 |
| 2003 வாகனம் | 100,000 | - | | - | 100,000 |
| 2102 அலுவலக உபகரணங்கள் | 200,000 | - | | 158,298 | 41,702 |
| 2103 இயந்திரம் மற்றும் இயந்திர சாதனங்கள் | 600,000 | - | | 576,400 | 23,600 |
| 2401 திறன் விருத்தி | 500,000 | - | | 402,113 | 97,887 |
| **மொத்தம் (அ) + (ஆ)** | 27,310,000 | - | | 23,401,620 | 3,908,380 |

### அரசாங்க அலுவலர்களின் முற்பணம் பீ கணக்கு

2013 ஆம் ஆண்டுக்காக இந்தத் திணைக்களத்தின் அரசாங்க அலுவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணம் பீ கணக்கின் விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ரூபா) | உண்மையான செலவு(ரூபா) |
|---|---|---|
| உயர்ந்தபட்ச செலவு எல்லை | 2,000,000 | 1,486,993 |
| குறைந்தபட்ச கிடைப்பனவு எல்லை | 1,200,000 | 1,350,713 |
| உயர்ந்தபட்ச பற்று மீதி எல்லை | 11,000,000 | 7,371,542 |

# 3. பௌதீக செயலாற்றுகை

## 3.1 அரச துறையின் உள்ளகக் கணக்காய்வு பணிகளின் செயற்திறனை அதிகரித்துதல்

### 3.1.1. உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல்

அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் பணியாற்றும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள்/ உள்ளகக் கணக்காய்வாளர்களின் தொழில்சார் அறிவினை மேம்படுத்துவதற்காகவும் காலத்திற்கேற்ற தகவல்களை வழங்குவதற்காகவும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களமானது தொடர்ச்சியாக அவர்களுக்கு ஒத்துழைத்து வருகின்றது. அந்த நோக்கத்திற்காக 2013 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களத்தினால் பின்வரும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

- அமைச்சுக்கள்/ மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களுக்காக செயலாற்றுகைக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழு முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று 2013.03.20 ஆம் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சின் “ரன்தொர” கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

- மாவட்டச் செயலகங்களில் பணியாற்றும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று 2013 செப்டம்பர் 27 ஆம் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சின் “ரன்தொர” கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது.

- பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் மாவட்டச் செயலகங்களில் பணியாற்றும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட “உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத்” தயாரிப்பது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக வளவாளர்களாக இந்தத் திணைக்களத்தின் உயரதிகாரிகள் பங்குபற்றினர்

### 3.2 உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை வழங்குதல்

பின்வரும் துறைகளின் கணக்காய்வு நடவடிக்கைகளை மிகவும் செயற்திறனுடையதாகவும் வினைத்திறனுடையதாகவும் மேற்கொள்வதை நோக்காகக் கொண்டு உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை வழங்க வேண்டியதன் தேவை திணைக்களத்தினால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

1. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் சிக்கனம், செயற்திறன் மற்றும் வினைத்திறன் என்பவற்றைப் பரிசீலனை செய்வதற்கு செயலாற்றுகைக் கணக்காய்வு (Performance Audit) பற்றிய வழிகாட்டல்கள்
2. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் விசேட விசாரணைகளை மேற்கொள்ளல் தொடர்பான வழிகாட்டல்கள்

தற்போது அந்த விடயத் துறைகள் பற்றிய மிகவும் பிரயோக ரீதியான அறிவைக் கொண்டுள்ள உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் நிபுணத்துவ அறிவுள்ள ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடி தொடர்புடைய வரைவு வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன. அடுத்த வருடத்தினுள் அந்த வரைவை மேலும் திருத்தம் செய்து வழிகாட்டலை வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக்களுக்கான திறைசேரியின் பிரதிநிதித்துவத்தின் மூலம் அரச துறையின் உள்ளகக் கணக்காய்வை பலப்படுத்தல்

அரசாங்க அமைச்சுக்களில் தாபிக்கப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுவுக்காக திறைசேரியின் பிரதிநிதிகளாக இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றுகின்றனர். அந்த அலுவலர்களினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை வினைத்திறனுடையதாக தொடர்ச்சியாக நடாத்துவது பற்றிய வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் பிரதானமாக அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை பலப்படுத்துதல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் கணக்காய்வு விசாரணைகளின் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்ற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடி, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேவையான ஆலோசனைகளை வழங்குவதும், அதன் பிரகாரம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய பின்னூட்டல்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் அரசாங்கத் துறையின் முகாமைத்துவ நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு பங்களிப்பை வழங்கியுள்ளது.

சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டினுள் 55 அமைச்சுக்களில் நடாத்தப்பட்ட 193 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், இலங்கைப் பாராளுமன்றம், சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், சிரேட்ட அமைச்சர்களின் அலுவலகம், அரசாங்க சேவை ஆணைக்குழு, தேர்தல் திணைக்களம்,புகையிரதத் திணைக்களம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

போன்ற அரசாங்க நிறுவனங்களில் 24 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

### 3.4 நிதி, திட்டமிடல் அமைசின் மற்றும் திறைசேரித் திணைக்களங்களின் முகாமைத்துவ கணக்காய்வுப்பணிகள்

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதான பணிகளிடையே முன்னணிப் பணியாகக் கருதப்படுகின்ற இந்தப் பணியானது, இந்த வருடத்தில் நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் பின்வரும் திணைக்களங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகள்மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம்,நிதிஅமைச்சுக்காகவம்ஏனைய சகல திணைக்களங்களுக்காகவும் ஒரு காலாண்டுக்குஒரு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வீதம் தலா 04 முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வீதம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் மூலம் அந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு தமது திணைக்களங்களினுள் பயன்வாய்ந்த முறையில் வினைத்திறனாக உள்ளக நிருவாக முறைகளையும் அதேபோன்று சிறந்த செயலாற்றுகை ஒன்றை மேற்கொள்வதற்கு பேருதவி கிடைத்துள்ளது.

1. தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
2. தேசிய திட்டமிடல் திணைக்களம்
3. அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்
4. அரச நிதித் திணைக்களம்.
5. அரச கணக்குகள் திணைக்களம்
6. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
7. திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
8. அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்
9. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
10. முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்
11. வர்த்தம், தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்
12. சட்ட அலுவல்கள் திணைக்களம்
13. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம்
14. அபிவிருத்தி நிதித் திணைக்களம்
15. இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

### 3.5 நிதி, திட்டமிடல் அமைச்சின் பல்வேறு திணைக்களங்களின் கீழ் தொழிற்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள்

முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்கு நிதி அமைச்சின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களின் வெளிநாட்டு உதவிகளின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளும் உள்ளடங்குகின்றன.
அதன் பிரகாரம், அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் உலக வங்கியின் உதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற பின்வரும் கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி அபிவிருத்திக்கு வசதிகளை வழங்கும் கருத்திட்டம். (SMEDeF)**

2013 ஆம் ஆண்டில் இந்த கருத்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கருத்திட்டத்தின் விடய தானம் 2013 ஆம் ஆண்டினுள் மாற்றத்திற்கு உட்பட்டதன்காரணமாக அது தொடர்பான ஒப்பந்தங்களின் கைச்சாத்திட்ட பின்னர் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை வழங்கப்படவுள்ளது.

### 3.6 விசேட புலனாய்வுகள் மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள்

நிதி, திட்டமிடல் அமைச்சிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கும் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரில் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது. அவ்வாறு அனுப்பப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் பரிசோதனை அறிக்கைகள் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக குறித்த அமைச்சின் செயலாளருக்கு அல்லது குறித்த நிறுவனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், முறைப்பாட்டின் ஏதேனும் உண்மை இருப்பின் அது பற்றி குறிப்பிட்டு விசாரணைகளின் மூலம் வெளியாகும் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் என்பன மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பதே இதன் நோக்கமாகும்.

**2013 ஆம் ஆண்டில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்ட விசாரணைகள்**

2013 ஆம் ஆண்டினுள் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் அவர்களினால்இந்தத் திணைக்களத்தின் அனுப்பப்பட்ட பின்வரும் முறைப்பாடுகள் பற்றி விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| தொடர் இல. | நிறுவனம் | விசாரணைகள் |
|---|---|---|
| 01 | தேசிய லொத்தர் சபை | தேசிய லொத்தர் சபையில் இடம்பெற்று வரும் முறைகேடுகள் |
| 02 | தேசிய லொத்தர் சபை | பெண் ஊழியர்களுக்காக சாரி கொள்வனவு செய்தல் |
| 03 | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும் முறைகேடுகள் |
| 04 | உள்ளூராட்சி அமைச்சு | உலக வங்கியின் உதவியின் கீழ் மாகாண வீதியமைப்பக் கருத்திட்டத்தின் முறைகேடுகள் |
| 05 | விவசாய மற்றும் காப்புறுதிச் சபை | உத்தியோகபூர்வ வாகனங்களின் முறையற்ற பாவனை |
| 06 | தேசிய லொத்தர் சபை | தேசிய லொத்தர் சபையில் தொழிற்படும் பணிப்பாளர் அவர்களின் நடவடிக்கை |
| 07 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | தலைவர் அவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற மோசடிகள் |
| 08 | 2013 தேசத்திற்கு மகுடம் | 2013 தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி சம்பந்தமாக |
| 09 | இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை | ஒழுங்கற்ற நிதி கொடுக்கல் வாங்கல் |
| 10 | விவசாய மற்றும் காப்புறுதிச் சபை | விவசாய மற்றும் காப்புறுதிச் சபையில் இடம்பெறுகின்ற முறைகேடுகள் |
| 11 | அரசாங்க சேவை ஓய்வூதிய நிதியம் | அரசாங்க சேவை ஓய்வூதிய நிதியத்தின் ஊழியர்களின் முறைகேடுகள் |
| 12 | தொல்பொருள் திணைக்களம் | வாகன விபத்துக் காப்புறுதி நஷ்டஈடு முறையற்ற விதத்தில் பெற்றுக் கொண்டமை |
| 13 | இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை | ஒழுங்கற்ற நிதி வீண்விரயம் சம்பந்தமாக |
| 14 | தேசிய லொத்தர் சபை | விலைமனுக்கோரல் வழங்கியமை சம்பந்தமாக |
| 15 | லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் |
| 16 | தேசிய லொத்தர் சபை | ஆதிஷ்டலாபச் சீட்டிழுப்புக்காக வழங்குவதற்கு 60 மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கோரல் சம்பந்தமாக |
| 17 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | பாதுகாப்புச் சேவை விலைமனுக்கள் வழங்கியது சம்பந்தமாக |

**2013 ஆம் ஆண்டில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டவிசேட கணக்காய்வுகள்**

| தொடர் இலக்கம் | தலையங்கம் | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | தேசத்திற்கு மகுடம் கணக்காய்வு நடவடிக்கை மேற்பார்வை | 2013 ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்ற குருநாகல், கேகாலை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மாவட்டச் செயலகங்களில் சேவைபுரிகின்ற உள்ளகக் கணக்காய்வாளர்களை இணைத்துக் கொண்டு தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் மேற்பார்வை நடவடிக்கை இந்தத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இது கணக்காய்வு அறிவைப் பகிர்ந்த கொள்ளுதல், கணக்காய்வுக் குறைபாடுகளை அடையாளங்காணுதல் மற்றும் சரிசெய்வதற்குத் தேவையான வழிவகைகளை எடுப்பதற்குப் பேருதவியாக அமைந்தது. |
| 02 | ஓய்வூதியக் கொடுப்பனவு நடவடிக்கைமுறை | அண்மைக்காலங்களில்ஓய்வூதியக் கொடுப்பனவு சமபந்தமாக ஏற்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டுத் தொகுதிகளின் பலவீனங்களை அடையாளங்காணுவதையும் அவற்றுக்குத் தீர்வு காணுவதையும் நோக்காகக் கொண்டு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தை மாதிரியாகக் கொண்டு விசேட கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 03 | சமுர்த்தி அதிகாரசபையின் சொத்துக்கள் பற்றிய கணக்காய்வு | திவிநெகம திணைக்களத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான நடவடிக்கையொன்றாக நாடுபூராவும் வியாபித்துள்ள சமுர்தி அலுவலகம் மற்றும் மாவட்டச் செயலகங்களிலுள்ள சுமார் 200 உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் சமுர்த்தி அதிகாரசபையின் சொத்துக்கள் பற்றிக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக இந்தத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் செயற்பாட்டுரீதியான பங்களிப்பினூடாக அவர்களுக்குத் தேவையான பிரயோகப் பயிற்சி மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| 04 | **e-friends** கருத்திட்டம் | ஜப்பான் சர்வதேச ஒத்தழைப்பு நிறுவனத்தின் (JICA) உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அந்தக் கருத்திட்டத்தின் செயற்பாடு பற்றிய விசேட கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. கருத்திட்டம் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைக்குரிய நிலைமைகளைத் தீர்ப்பதற்காக திறைசேரிச் செயலாளரின் ஆலோசனையின் பேரில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் வேண்டிய ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இங்கு கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட சகல அரசாங்க மற்றும் தனியார் வங்கிகளுடன் தொடர்பு கொண்டு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில், அதன் அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் அதிபதிக்கும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. |

# 4. மனித வள அபிவிருத்தி மற்றும் பொது நிருவாகம்

## 4.1 பணியாளர்கள்

முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் கீழ் தொழிற்படுகின்ற இந்தத் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 48 ஆக இருக்கின்ற அதேவேளையில், 2013 ஆம் ஆண்டுக்குரிய பணியாளர்களின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பதவி | பணியாளர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட | தற்போது இருக்கின்ற | வெற்றிடம் |
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| மேலதி பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| பணிப்பாளர் (இ.க.சே/இ.தி.சே/இ.நி.சே) | 08 | 08 | - |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (இ.க.சே) | 07 | 01 | 06 |
| அபிவிருத்தி அலுவலர் | 06 | 02 | 04 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 14 | 11 | 03 |
| சாரதி | 07 | 05 | 02 |
| அலுவலக ஊழியர் | 04 | 04 | - |
| மொத்தம் | 48 | 33 | 15 |

**2013 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று திணைக்களத்திற்கு வந்துள்ள அலுவலர்கள்**

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு. ஏ.என். ஹப்புகல | பணிப்பாளர் |
| 02 | திருமதி. சம்பிகா ரனசிங்ஹ | பணிப்பாளர் |
| 03 | திருமதி. கே.ஏ.எச்.எம். கபுவத்த | அபிவிருத்தி அலுவலர் |
| 04 | திருமதி. எம்.டீ.எஸ்.எஸ் வீரசிங்ஹ | அபிவிருத்தி அலுவலர் |
| 05 | திருமதி. ஏ.கே.எஸ். போதிகா நந்தனி | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| 06 | திருமதி. எதிரிசூரிய | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| 07 | திரு. எம். டப்ளியூ. லக்ஷ்மன் குமார | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| 08 | திருமதி. எம். டப்ளியூ.ஏஎஸ். ஷாந்தமாலி | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |

| | | |
|---|---|---|
| 09 | திருமதி. டப்ளியூ. பீ. கல்யாணி குணரத்ன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| 10 | திருமதி. எச்.டீ.எல்.எம். ஷ்ரியன்தி | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| 11 | திரு. கே.ஜீ. த சில்வா | சாரதி |
| 12 | திரு. எச்.டீ.பீ. சரத்குமார | சாரதி |
| 13 | திரு. எச்.ஆர்.என்.எஸ். நந்தசேன | அலுவலக ஊழியர் |
| 14 | திரு. ஆர்.என்.டப்ளியூ. முதலிகே | அலுவலக ஊழியர் |

**2013 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அலுவலர்கள்**

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு. எச்.சீ.டீ.எல். சில்வா | பணிப்பாளர் |
| 02 | திருமதி. டப்ளியூ.கே.பீ.எச்.என். ருத்ரிகு | ஆய்வு உதவியாளர் |
| 03 | திருமதி. அனுருத்திகா வீரரத்ன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| 04 | திரு. எச்.ஏ.ராஜகருணா | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் |
| 05 | திருமதி. டீ.ஜீ. எதிரிசூரிய | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் (காலம் 2013.01.02 முதல் 2013.06.28) |
| 06 | திரு. எம். டப்ளியூ. லக்ஷ்மன் குமார | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் (காலம் 2013.01.08 முதல் 2013.01.10) |
| 07 | திருமதி. எச்.டீ.எல்.எம். ஷ்ரியன்தி | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் (காலம் 2013.09.17 முதல் 2013.12.31) |
| 08 | திரு. எஸ்.ஏ.எஸ். சுரங்ஜ | அலுவலக ஊழியர் |
| 09 | திரு. டீ.கே. ஜயரத்ன | சாரதி |

### 4.2 பணியாளர்களின் பயிற்சி

திணைக்களத்தின் மனித வள அபிவிருத்தியின் பொருட்டு பதவியினரின் தொழிற் தகைமையை மேம்படுத்தும் நோக்கில்2013 ஆம் ஆண்டிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிக் கற்கைநெறிகளுக்காக அலுவலர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டனர்.

#### 4.2.1 2013 ஆம் ஆண்டில் உள்நாட்டு பயிற்சி

கீழே காட்டப்பட்டுள்ள விதமாக உள்நாட்டு பயிற்சிக்காக 2013 ஆம் ஆண்டினுள்இந்தத் திணைக்களத்தின் அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

| அலுவலர்களி பெயர் | பதவி | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பயிற்சி நிறுவனம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| திருமதி. கே.ஆர்.ஆர். பிரனாந்து<br>திருமதி. ஜீ.டீ.கே. லியனகே | அ.மு.உ | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தை விநியோகித்தல் அரச கணக்குகள் திணைக்களம் | 2013.01.10 |
| திரு. ஆர்.ஆர்.கே. நுகபிட்டிய<br>திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த<br>திரு. எஸ்.எம். தயாரத்ன<br>திரு.எஸ்.கே. குசலகுமாரன்<br>செல்வி. ஏ.கே. குணசேகர<br>செல்வி. வீ.ஐ. தில்ஹானி | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பிரதிப் பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர் | ஸ்ரீ லங்கா பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்<br>அரசிறை கணக்கீட்டு நிறுவனம்<br>(APFA) | 2013.01.30 |
| திணைக்களத்தின் சகல அலுவலர்களும் | | திறன் விருத்திப் பயிற்சி -2013<br>முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் | 2013.02.15<br>2013.03.05 |
| திருமதி. எஸ்.ஏ. சந்திரிக்கா குலதிலக<br>செல்வி. வீ.ஐ. தில்ஹானி | பணிப்பாளர் நாயகம்<br>உதவிப் பணிப்பாளர் | Capacity Building Training Programme – (ITMIS Project)<br>மிலோதா நிறுவனம் | 2013.02.28<br>2013.03.01 |
| திருமதி. ஜீ.டீ.கே. லியனகே | அ.மு.உ | உயர் கணினிப் பயிற்சி<br>அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | 2013.03.25<br>2013.03.28 |
| திரு. எஸ்.எம்.தயாரத்ன | பணிப்பாளர் | Microsoft Office – 2010<br>The Institute of Chartered Accounts of Sri Lanka | 2013.03.27<br>2013.03.28 |
| திரு. ஆர்.ஆர்.கே. நுகபிட்டிய<br>திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த<br>திரு. எஸ்.எம். தயாரத்ன<br>செல்வி. வீ.ஐ. தில்ஹானி | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர் | How to minimize Audit Queries and Improve Public Accountability<br>அரசிறை கணக்கீட்டு நிறுவனம்<br>(APFA) | 2013.04.05 |
| திரு. ஆர்.ஆர்.கே. நுகபிட்டிய<br>திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த<br>திரு. எஸ்.எம். தயாரத்ன<br>திரு.எஸ்.கே. குசலகுமாரன்<br>திரு. ஏ.என். ஹப்புகல<br>செல்வி. வீ.ஐ. தில்ஹானி | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர் | ஸ்ரீ லங்கா பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்<br>அரசிறை கணக்கீட்டு நிறுவனம்<br>(APFA) | 2013.06.10<br>2013.06.11 |
| திருமதி. எம்.டப்ளியூ.ஏ.எஸ். ஷான்தமாலி | அ.மு.உ | அரசாங்க கணக்காய்வு நடவடிக்கை<br>இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 2013.06.13<br>2013.06.14 |
| செல்வி. கே.ஏ.பீ.எம். குணரத்ன | அ.மு.உ | அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக முறைமை<br>திறன் விருத்தி நிதியம்<br>(SDFL) | 2013.06.25<br>2013.06.26 |

| | | | |
|---|---|---|---|
| திருமதி. ஜீ.டீ.கே. லியனகே<br>திருமதி. எச்.கே.சீ. பிரியதர்ஷனி<br>திருமதி. எம்.டப்ளியூ.ஏ.எஸ். ஷான்தமாலி<br>திருமதி. ஏ. வீரரத்ன<br>திருமதி. ஈ.எம்.ஜீ.எல் ஏக்கநாயக்க<br>செல்வி. கே.ஏ.பீ.எம். குணரத்ன<br>திருமதி. கே.ஏ.எச்.எம். கபுவத்த | அ.மு.உ<br>அ.மு.உ<br>அ.மு.உ<br><br>அ.மு.உ<br>அ.மு.உ<br><br>அ.மு.உ<br>அபிவிருத்தி அலுவலர் | தமிழ் மொழி – இரண்டாம் மட்டம்<br>நிதி, திட்டமிடல் அமைச்சு | 2013.07.23 |
| திருமதி. கே.ஆர்.ஆர். பிரனாந்து | அ.மு.உ | Payroll System<br><br>அரசிறை கணக்கீட்டு நிறுவனம் (APFA) | 2013.09.03<br>2013.09.07 |
| திரு. எஸ்.எம். தயாரத்ன | பணிப்பாளர் | Conference 2013 authentic reports<br><br>இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் | 2013.09.09<br>2013.09.10 |
| திரு. எச்.ஆர்.என்.எஸ். நந்தசேன | அலுவலக ஊழியர் | அலுவலகப் பணியாளர் சேவையில் செயலாற்றுகை மேம்படுத்தல்<br><br>இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 2013.11.04<br>2013.11.06 |
| திருமதி. ஈ.எம்.ஜீ.எல் ஏக்கநாயக்க | அ.மு.உ | மூன்று நாள் வதிவிடப் பயிற்சிச் செயலமர்வு<br><br>திறன் விருத்தி நிதியம் (SDFL) | 2013.11.25<br>2013.11.27 |
| திணைக்களத்தின் அலுவலர்கள் | | செயலாற்றுகை பயிற்சிச் (வதிவிட) செயலமர்வு<br><br>திருகோணமலை சர்வோதய பயிற்சி நிலையம் | 2013.12.21<br>2013.12.23 |

### 4.2.2 வெளிநாட்டு பயிற்சி

இந்தத் திணைக்களத்தின் அலுவலர்கள் கீழே காட்டப்பட்டுள்ள விதமாக 2013 ஆம் ஆண்டினுள்வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும் தூதுக் குழுக்களிலும் பங்குபற்றியுள்ளனர்.

| பெயர் | பதவி | பயிற்சிக் கற்கைநெறி | இடம்பெற்ற நாடு | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|
| செல்வி. ஏ.கே. குணசேகர | பிரதிப் பணிப்பாளர் | MF Macroeconomic Seminar for Asia (JIMS) | ஜப்பான் | 2013.02.25<br>2013.03.01 |
| செல்வி. வீ.ஐ. தில்ஹானி | உதவிப் பணிப்பாளர் | e-Governance and Change management | சிங்கப்பூர் | 2013.07.15<br>2013.07.19 |
| திருமதி. எஸ்.ஏ. சந்திரிக்கா குலதிலக | பணிப்பாளர் நாயகம் | e-Governance and Change | சிங்கப்பூர் | 2013.10.04<br>2013.10.08 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | management | | |
| திரு.டீ.யூ.எஸ்.விக்கிரமஆரச்சி | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | e-Governance and Change management | சிங்கப்பூர் | 2013.10.25 2013.10.29 |
| திருமதி. எஸ்.ஏ. சந்திரிக்கா குலதிலக | பணிப்பாளர் நாயகம் | 30th Anniversary Session of International Working group of Experts on International Standards of Accounting and Reporting | ஜெனீவா – சுவிட்சலாந்து | 2013.11.06 2013.11.08 |
| திரு.டீ.யூ.எஸ். விக்கிரமஆரச்சி | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | Seminar on Inland Economy for Development Countries | சீனா | 2013.11.06 2013.11.26 |
| திரு. ஏ.என். ஹப்புகல | பணிப்பாளர் | 30th Anniversary Session of International Working group of Experts on International Standards of Accounting and Reporting | ஜெனீவா – சுவிட்சலாந்து | 2013.11.06 2013.11.08 |

### 4.2.3 செயலாற்றுகை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

திணைக்களத்தின் சகல பணியாளர்களினதும் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு 2013 ஆம் ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

- திணைக்களம் பற்றிய அறிமுகம் மற்றும் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் பற்றி விளக்கமளிக்கும் நோக்கத்துடன் செயலாற்றுகை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத் தொடரொன்று 2012.03.12 ஆம் திகதி முதல் 2012.03.23 ஆம் திகதி வரை நிதி, திட்டமிடல் அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது. திணைக்களத்தினால்அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஏழு(7) சுற்றறிக்கைகள் பற்றிபதவிநிலை உத்தியோகத்தர்களினால்விரிவுரைகள்நிகழ்த்தப்பட்டது.

- முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்தல் மற்றும் நேர் சிந்தனைகளை விருத்தி

செய்வதினூடாக உயர்ந்தபட்ச செயற்திறன் மற்றும் வினைத்திறன்மிக்க சேவையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும், அலுவலர்களிடையே பரஸ்பர நட்பையும் அதிகரிக்கும் நோக்கத்துடன் ஒழுங்கு செய்யப்பட்ட வதிவிட செயலாற்றுகை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21,22 மற்றும் 23 ஆம் திகதிகளில் திருகோணமலை சர்வோதய பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பபட்டது.